**மாற்கு – 1**
*வசனம் 4-5* மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம் என்றால் என்ன?
1. பாவமன்னிப்பிற்கு 2. இயேசுவை இருதயத்தில் ஏற்றுகொள்வது 3. தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்தல் 4. குளிப்பது

*வசனம் 5-6* ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பு அவா்கள் என்ன செய்தார்கள்?
1. தேவனிடத்தில் ஜெபித்தார்கள் 2. பாவங்களை அறிக்கையிட்டார்கள் 3. எருசலேமிற்கு சென்றார்கள் 4. யோர்தான் நதியில் நடந்தார்கள்

*வசனம் 16-17* சீமோனிடத்திலும் அந்திரேயாவினிடத்திலும் இயேசு என்ன சொன்னார்? என்னை பின்பற்றுங்கள் நான் உங்களை இப்படியாக்குவேன்.
1. புனிதர்கள் 2. மீனவர் 3. மனுஷரைப் பிடிப்பவர் 4. நீந்துபவர்கள்

*வசனம் 16-20* எப்பொழுது சீமோன், அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவான் இயேசுவை பின்பற்றினார்கள்?
1. அவர்களுடைய வியாபாரத்தை முடித்து விட்டு 2. அவர்களுடைய தகப்பனார் இறந்த பிறகு 3. அவர்களுடைய வேலையாட்கள் இயேசுவை பின்பற்றுவதற்கு முன் 4. உடனடியாக

*வசனம் 22* அவருடைய போதகத்தைக் குறித்து ஜனங்கள் ஏன் ஆச்சரியப்பட்டார்கள்?
1. அதிகாரமுடையதாய் இருந்தது 2. அதில் கோரிக்கைகள் இருந்தது 3. அது கவிதை வடிவில் இருந்தது 4. அது மிக சுலபமாக இருந்தது

*வசனம் 35* அதிகாலையில் இயேசு செய்த முதல் காரியம் என்ன?
1. அவர் நடப்பதற்கு சென்றார் 2. அவர் ஜெபித்தார் 3. அவர் பத்திரிகைத்தாள் வாசித்தார் 4. அவர் பல் துளக்கினார்

*வசனம் 40-45* இயேசு ஏன் அந்த குஷ்டரோகியைத்தொட்டார்?
1. அவரை வெளியே துரத்துவதற்கு 2. அவர் பாதிக்கப்படமாட்டார் என்பதை காண்பிப்பதற்கு 3. அவர் மனதுருகினார் 4. புகைப்படம் எடுத்துக்கொண்டு மற்றவர்களிடம் காண்பிப்பதற்கு

**மாற்கு 2**
*வசனம் 1-7* இயேசு திமிர்வாதக்காரனை எதற்காக மன்னித்தார்?
1. அவர் பாவி என்பதற்காக 2. அவர் மன்றாடி கேட்டுக்கொண்டார் 3. இயேசு அவனிடத்தில் மனதுருகினார் 4. இயேசு அவனுடைய நண்பர்களின் விசுவாசத்தை கண்டதினால்

*வசனம் 8-12* பாவங்களை மன்னிப்பதற்கு யாருக்கு அதிகாரம் உண்டு?
1. இயேசு கிறிஸ்து 2. எனக்கு 3. எல்லோருக்கும் 4. சரியாக தெரியாது

*வசனம் 15-17* இயேசு எதற்காக ஆயக்காரரோடும் பாவிகளோடும் உணவருந்தினார்?
1. அவரும் பாவி என்பதற்க்காக 2. பிரபலமடைவதற்க்காக 3. வேறு நண்பர்கள் இல்லாத காரணத்தினால் 4. பாவத்திலிருந்து அவர்களை குணமடைய செய்வதற்காக

**மாற்கு 3**
*வசனம் 1-5* இயேசு எதற்காக கோபப்பட்டார்?
1. அவர் கோபமான மனுஷன் 2. மக்களுக்கு இருதய கடினம் இருந்தது 3. அற்புதங்கள் ஏதும் அவரால் செய்ய இயலாததினால் 4. மக்கள் எல்லோரும் அவரை கேலி செய்ததினால்

*வசனம் 1-2* நம்முடைய இருதயத்தை கடினப்படுத்துவது எது?
1. பாரம்பரியங்களை பின்பற்றுவதினால் 2. இயேசுவை பின்பற்றுவதினால் 3. வேதாகமத்தை வாசிப்பதினால் 4. அறிவுரை எடுப்பதினால்

*வசனம் 20-21* இயேசுவின் குடும்பத்தினர் அவரை மதிமயங்கியவர் என்று ஏன் கூறினர்?
1. அவர் விளையாட்டுத்தனமாக நடந்து கொண்டதினால் 2. அசுத்த ஆவி பிடித்ததினால் 3. அவர் அதிகமாக சாப்பிட்டதினால் 4. தேவனுடைய பணிக்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டதால்

*வசனம் 31-35* என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று இயேசு எதற்காக சொன்னார்?
1. அவர்களைக் குறித்து இயேசு வெட்கப்பட்டதினால் 2. அவர்கள் இயேசுவை தொந்தரவு செய்ததினால் 3. அவர் அவர்களை மதிக்காததினால்
4. தேவனுடைய சித்தத்தின்படி செய்பவர்களே அவருடைய குடும்பம் என்பதினால்

**மாற்கு 4**
*வசனம் 1-9* உவமைகளை யாரால் புரிந்து கொள்ள முடியும்?
1. பரிசுத்தமான மக்கள் 2. விவசாயிகள் 3. நல்ல மக்கள் 4. செவி உள்ளவர்கள்

*வசனம் 14* விதை என்பது என்ன?
1. இருதயம் 2. வார்த்தை 3. உலகம் 4. சாத்தான்

*வசனம் 15* வழிப்பாதை என்பது என்ன?
1. இலகுவான இருதயம் 2. பதிலளிக்காத இருதயம் 3. பதிலளிக்கின்ற இருதயம் 4. அக்கறை காட்டும் இருதயம்

*வசனம் 16-17* கற்பாறையான நிலம் எது?
1. உணர்ச்சிப்பூர்வமான இருதயம் 2. இலகுவான இருதயம் 3. பதிலளிக்கின்ற இருதயம் 4. கடினமான இருதயம்

*வசனம் 18-19* முள்ளுள்ள இடம் எது?
1. இலகுவான இருதயம் 2. பதிலளிக்கின்ற இருதயம் 3. நெருக்கப்பட்ட இருதயம் 4. கடினமான இருதயம்

*வசனம் 20* எது நல்ல நிலம்?
1. நெருக்கப்பட்ட இருதயம் 2. உணர்ச்சிப்பூர்வமான இருதயம் 3. பதிலளிக்காத இருதயம் 4. பலன் தரக்கூடிய இருதயம்

*வசனம் 35-41* காற்றும் கடலும் இயேசுவுக்கு ஏன் கீழ்படிந்தது?
1. அவர் மாய வித்தைக்காரா என்பதால் 2. அவர் பிசாசு பிடித்தவர் என்பதால் 3. அவர் நடிகர் என்பதால் 4. அவர் உலகத்தை சிருஷ்டித்ததினால்

**மாற்கு 5**
*வசனம் 1-20* பிசாசு பிடித்த மனிதன் குணமடைந்தவுடன் என்ன செய்தான்?
1. அவன் தனக்குள்ளாகவே வைத்துக் கொண்டான் 2. மற்றவர்களிடம் அதைப்பற்றி பேச பயந்தான். 3. இயேசு அவனுக்காக செய்த காரியத்தை அறிக்கையிட்டான் 4. அவன் அதைப்பற்றி பேச வெட்கப்பட்டான்.

*வசனம் 25-34* அந்தப் பெண்மணிக்கு விசுவாசம் இருந்ததென்று இயேசு எவ்வாறு அறிந்து கொண்டார்?
1. அவள் பயமுள்ள பெண்மணியாக இருந்ததினால் 2. இயேசுவுடைய வஸ்திரத்தை தொடமுயற்சி செய்ததினால் 3. அவள் உண்மையை கூறினதினால்

4. அவள் 12 வருடமாக உதிரப்போக்கு உடையவளாய் இருந்ததினால்

*வசனம் 38-43* ஜெபஆலயத்தலைவன் தன்னுடைய மகள் இறந்து விட்டாள் என்பதை அறிந்தவுடன் அவனிடத்தில் இயேசு என்ன சொன்னார்?
1. விசுவாசமுள்ளவனாயிரு 2. என்னை மன்னித்து விடு 3. எனக்கு மகிழ்ச்சி 4. அவளை அடக்கம் பண்ணுங்கள்

**மாற்கு 6**
*வசனம் 1-5* நாம் விசுவாசியாதபோது என்ன சம்பவிக்கும்?
1. நாம் நோய்வாய்ப்படுவோம் 2. அற்புதங்களை காண முடியாது 3. இயேசுவைப் பிரியப்படுத்துவோம் 4. நம்முடைய முடியை இழந்து விடுவோம்

*வசனம் 45-50* இயேசு உங்களுக்கு எவ்வாறாக காட்சியளித்திருப்பார் என்று நினைக்கிறீர்கள்?
1. பிசாசாக 2. முனிதராக 3. ஆவியாக 4.தேவனாக

**மாற்கு 7**
*வசனம் 6-7* உங்களுடைய உதடுகளினால் இல்லாமல் இருதயத்திலிருந்து எவ்வாறெல்லாம் தேவனை கனப்படுத்தலாம்?
1. மனப்பாடமான ஜெபம் 2. பாரம்பரியங்களை பின்பற்றுவதன் மூலம் 3. தேவனுடனான தனிப்பட்ட உறவு 4. மனிதனுடைய கட்டளையை பின்பற்றுவதன் மூலமாக

*வசனம் 9* மத ரீதியான பாரம்பரியங்களுக்கு என்னென்ன எடுத்துக்காட்டுகள் இருக்கின்றது?
1.வேதத்தை பின்பற்ற வேண்டுமே என்ற கடமைக்காக பின்பற்றுவது 2. வேதத்தின் மூலமாக தேவனுக்கு செவி சாய்ப்பது 3. இடைவிடாமல் ஜெபத்தின் மூலமாக தேவனுடன் உரையாடுவது 4. தேவனையும் பிறரையும் முழு மனதுடன், ஆத்துமாவுடன் மற்றும் பெலத்துடன் சிநேகிப்பது

*வசனம் 18-23* எது நம்மை அசுத்தப்படுத்துகிறது?
1. நமக்குள்ளாக இருப்பது 2. நம்மைச் சுற்றியுள்ள நபர்களின் மூலமாக 3. நம்முடைய பெற்றோர்களின் மூலமாக 4. நாம் உட்கொள்ளும் உணவின் மூலமாக

**மாற்கு 8**
*வசனம் 17-21* ஏன் நம்முடைய இருதயம் கடினமாகிறது?
1. நாம் தேவனுடைய தயவையும் அற்புதங்களையும் மறந்து விடுவதினால் 2. நாம் அதிகமான அப்பத்தை உட்கொள்ளும் போது 3. நாம் புளிப்பில்லாத அப்பத்தை உட்கொள்ளும் போது 4. மீதியான துணிக்கைகளை எடுக்க தவறும் போது

*வசனம் 27-30* நீங்கள் இயேசுவை யார் என்று சொல்கிறீர்கள்?
1. நல்ல மனிதர் 2. கிருஷ்ணனுடைய அவதாரம் 3. இரட்சகராகிய கிறிஸ்து 4. தீர்க்கதரிசி என்று

*வசனம் 34-37* நீங்கள் இயேசுவைப் பின்பற்ற வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும்?
1. சுயநலமுள்ள வாழ்க்கை வாழ்வதன் மூலமாக 2. அதிகமான வருமானம் ஈட்ட நோக்கமாயிருப்பதன் மூலமாக 3. இயேசுவைப் பற்றி வெட்கமடைவதன் மூலமாக 4. தன்னைத்தான் வெறுத்து சிலுவையை எடுப்பதன் மூலமாக

**மாற்கு 9**
*வசனம் 20-29* உமக்கு சித்தமானால் என்று ஏன் அந்த மனிதன் இயேசுவிடம் சொன்னான்?
1. அவன் இயேசுவுக்கு சவாலிட்டான் 2. அவன் இயேசுவை கேலி செய்தான் 3. அவன் சீஷர்களின் மேல் கோபமாக இருந்தான் 4.அவன் இயேசுவால் குணமடையச் செய்ய முடியுமா என்று சந்தேகப்பட்டான்.

*வசனம் 33-36* யார் பெரியவன் அல்ல?
1. ஊழியக்காரன் 2. குழந்தை 3. வாக்குவாதம் செய்பவர் 4. இயேசுவை ஏற்றுக்கொள்பவர்கள்

*வசனம் 42-50* எதை தறித்துப் போடக்கூடாது?
1 .இடறலுண்டாக்கக்கூடிய கை 2. இடறலுண்டாக்கும் மற்றவர்கள் 3. இடறலுண்டாக்கக்கூடிய கண்கள் 4.மனஉறுதியையும் சமாதானத்தையும் தரும் உப்பை

**மாற்கு 10**
*வசனம் 2-12* திருமணத்தைப் பற்றி உண்மையான கட்டளை என்ன?
1. தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன் 2. தள்ளுதற்சீட்டை எழுதிக்கொடுப்பது 3. ஆணும் ஆணும் விவாகம் செய்து கொள்ளலாம் 4. மறுபடியும் மறுபடியும் திருமணம் செய்து கொள்வது

*வசனம் 29* உங்களுக்கு விட்டுக்கொடுக்க கடினமாக இருப்பது எது?
1. சொத்துக்கள் 2. பெற்றோர் 3. எதிர்காலம் / வேலை 4. பிள்ளைகள்

*வசனம் 46-52* பர்திமேயு எதனால் குணப்படுத்தப்பட்டான்?
1. உரக்க சத்தமிட்டு கூப்பிட்டான் 2. அநேகர் அதட்டியபோது அமைதியானான் 3. இயேசு அவனிடம் வரவேண்டும் என்று எதிர்பார்த்தினால் 4. தனக்கு என்ன வேண்டும் என்பதை அறியாமல் இருந்தான்

**மாற்கு-11**
*வசனம் 15-17* தன்னுடைய வீட்டைப் பற்றி இயேசு அவர்களுக்கு என்ன போதித்தார்?
1. அது ஜெப வீடு ன்று 2. கள்ளர் குகை என்று 3. அது பொருட்களை வாங்கும் இடமென்று 4. அது பொருட்களை விற்கும் இடமென்று

*வசனம் 25* யாரை நீங்கள் மன்னிக்கவில்லை?
1. என்னுடைய நண்பர் 2. என்னுடைய உறவினர் 3. என் குடும்பத்தினர் 4. என்னுடன் வேலை செய்பவர்கள் /படிப்பவர்கள்

**மாற்கு 12**
*வசனம் 15-17* எதற்காக நாம் வரி செலுத்த வேண்டும்
1. அது சாபம் என்பதற்காக 2. நான் செலுத்த மாட்டேன் 3. அது அரசாங்கத்திற்குரியது 4. எனக்குத் தெரியாது

*வசனம் 29* எது பிரதான கட்டளை?
1. தேவனிடத்தில் அன்பு கூறுவது 2. நம்மை நாமே அன்பு கூறுவது 3. தகனபலி செலுத்துவது 4. கேள்வி கேட்பது

*வசனம் 41-44* அந்த ஏழை விதவையை இயேசு ஏன் புகழ்ந்தார்?
1. அவள் எழை என்பதற்க்காக 2. அவள் விதவை என்பதற்க்காக 3. தன்னுடைய பரிபூரணத்திலிருந்து கொடுத்தாள் என்பதற்க்காக
4. தன் வறுமையிலிருந்து கொடுத்தாள் என்பதற்க்காக

**மாற்கு 13**
*வசனம் 10-13* யார் இரட்சிக்கப்படுவார்கள்?
1. முடிவு பரியந்தம் நிலைநிற்பவர்கள் 2. ஐசுவரியவானாக இருப்பவர்கள் 3. அந்நிய பாஷைகள் பேசுபவர்கள் 4. நிலநடுக்கத்தில் நிலை நிற்பவர்கள்

*வசனம் 21-23* கள்ளத்தீர்க்கதரிசி என்று எப்படி அறிந்து கொள்வீர்கள?
1. அவர்களுக்கு தாடி இருப்பதின் மூலமாக 2. அவர்கள் ஒற்றுமையுடன் இருப்பதினால் 3. யூதாஸைப் போல் இருப்பதினால் 4. அற்புதங்களும் அடையாளங்களும் செய்வதின் மூலமாக

*வசனம் 32-37* எதற்காக நீங்கள் ஜாக்கிரதையாக அல்லது விழித்திருப்பவர்களாக இருக்க வேண்டும்?
1. இயேசு நம்மை தண்டிப்பார் என்பதற்காக 2. இயேசு நம்மை கடிந்து கொள்வார் என்பதற்காக 3. இயேசு எதிர்பாராமல் வருவார் என்பதற்காக 4. தேர்விற்கு படிப்பதற்காக

**மாற்கு 14**
*வசனம் 3-9* அந்த ஸ்திரீ ஏன் விலையுயர்ந்த பரிமள தைலத்தை இயேசுவின் சிரசின்மேல் ஊற்றினாள்?
1. இயேசு ஏழை என்பதனால் 2. அவள் இயேசுவை நேசித்ததினால் 3. அவள் ஐசுவரியமுடையவள் என்பதால் 4. அவள் மதிகேடானவள் என்பதால்

*வசனம் 26-31* இயேசுவைப் பொறுத்தவரை சேவல் கூவுகிறதற்கு முன்பாக யார் வழி தப்பி போவார்கள்?
1. பேதுரு 2. எல்லோரும் 3. இயேசு 4. நான்

*வசனம் 32-38* நாம் ஏன் விழித்திருந்து ஜெபம் செய்ய வேண்டும்?
1. தூங்காமல் இருப்பதற்கு 2. சோதனைக்குட்படாமல் இருப்பதற்கு 3. மற்றவர்கள் நம்மை கவனித்துக்கொண்டு இருப்பதற்கு 4. நாம் வேலைக்கு தாமதமாகிவிடும் என்பதற்கு

*வசனம் 32-39* ஏன் இயேசு மூன்று முறை ஜெபம் செய்ய வேண்டியதாயிருந்தது ?
1. அவர் சிலுவைக்குச் செல்ல தயாராக இல்லை 2. சீஷர்கள் மூன்று முறை நித்திரையடைந்திருந்தார்கள் 3. முதலாவது பேதுருவுக்கு இரண்டாவது யாக்கோபிற்கு மற்றும் மூன்றாம் முறை யோவானுக்காக 4. அவர் தூங்க விருப்பமில்லாததினால்

*வசனம் 43-50* நீங்கள் யாரைப்போல் இருக்கிறீர்கள்?
1. யூதாஸ் 2. பேதுரு 3. பிரதான ஆசாரியனின் ஊழியக்காரன் 4. இயேசு

*வசனம் 60-63* பிரதான ஆசாரியன் ஏன் தன்னுடைய வஸ்திரங்களை கிழித்துக் கொண்டான்?
1. இயேசு தன்னை தேவன் என்று சொன்னதினால் 2. இயேசுவை அவர் விரும்பினதினால் 3. இயேசு குளிராக இருக்கிறது என்று சொன்னதற்காக 4. இயேசு தாழ்மையாக இல்லாததினால்

*வசனம் 66-72* ஏன் பேதுரு நொறுங்குண்டு மிகவும் அழுதான்?
1. பேதுரு இயேசுவை மறந்ததினால் 2. இயேசுவை தான் அறிந்திருந்ததை பேதுரு மறுதலித்ததினால் 3. வேலைக்கார பெண் பேதுருவைப் பற்றி நல்ல அபிப்ராயம் இல்லாததினால் 4. சேவல் இறந்ததினால்

**மாற்கு 15**
*வசனம் 1-5* எதற்காக பிலாத்து ஆச்சரியப்பட்டான்?
1. இயேசு தன்னை பிரதான ஆசாரியர் என்று சொன்னதினால் 2. இயேசு தன்னை யூதர்களின் ராஜா என்று சொன்னதினால் 3. இயேசு தம்மால் அற்புதங்கள் செய்யமுடியும் என்று சொன்னதினால் 4. இயேசு தன்னைக் குற்றப்படுத்தினதிற்கு உத்தரவு ஒன்றும் சொல்லாததினால்

*வசனம் 6-13* இயேசுவை சிலுவையிலறையவேண்டுமென்று யார் கேட்டுக் கொண்டார்கள்?
1. பிலாத்து 2. பிரதான ஆசாரியர் 3. ஜனக்கூட்டம் 4. நான்

*வசனம் 16-20* போர்ச்சேவகர்கள் இதை செய்யவில்லை.
1. முள்முடி சூட்டியது 2. இயேசுவை பரியாசம் பண்ணினது 3. அவர்மேல் துப்பினது 4. இயேசுவை கனம் செய்யாதது

*வசனம் 21-34* நூற்றுக்கதிபதி, இயேசுவே தேவனுடைய குமாரன் என்று எதனால் சொன்னார்?
1. இயேசுவின் இறுதி நிகழ்வுகளை கண்டதினால் 2. இயேசு திகிலடைந்ததினால் 3. இயேசு எலியா என்பதினால் 4. இயேசு தாகமாயிருப்பதை கண்டதினால்

**மாற்கு 16**
*வசனம் 1-8* எதற்காக ஸ்திரீகள் கல்லறைக்கு சென்றார்கள்?
1. வாலிபனை காண்பதற்காக 2. உயிர்த்தெழுவேன் என்று இயேசு கூறினதினால் 3. இயேசுவிற்கு அபிஷேகம் செய்வதற்காக 4. அழுவதற்காக

*வசனம் 15-18* இயேசு சீஷர்களை நோக்கி என்ன கூறினார்?
1. போய் அற்புதங்கள் செய்து நோய்களை குணமாக்குங்கள் 2. போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் 3. போய் பிசாசுகளைத் துரத்துங்கள் 4. போய் பாம்புகளை பிடியுங்கள்.